

மூதாரை பிறப்பிடமாகவும் திருகோணமலை கந்தசாமி கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். திருமதி பரமேஸ்வரி முத்துலிங்கம்


அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

## 02.02.2015 திங்கட்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி- பரமேஸ்வரி முத்துலிங்கம்

மலர்வு - 1955.05.06 உதிர்வு - 2015.01.03

ஜயவருட மார்கழித்திங்கள்
சௌபாக்கியமுள்ள சனிக்கிழமை
பூர்வபட்சத்து பொன்னெனும் சதுர்தசித்திதி வேளையிலே
குஞ்சு எனஓதும் பரமேஸ்வரி பூவுலகு நீத்து வானுலகு சேர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

முந்தித் தவம் இருந்து
முந்நூறு நாள் சுமந்து
அந்திப் பகலாய் எம்மை
அறிவூட்டி அரவணைத்து
உதிரத்தைப் பாலாய் ஊட்டி
எம்மை - வளர்த்து
அகிலத்தில் சிறப்பாக
வாழவைத்து இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர். பரமேஸ்வரி முத்துலிங்கம்
ஆகிய எமது அகல் விளக்கு அன்னை
நினைவாக திருக்கோணேசப்
பெருமானினதும்,
வில்லூன்றிக் கந்தனினதும், ஸ்ரீ பத்திரகாளி
அம்பாளினதும்
பாதங்களில் அவர்தம் நினைவாகக்
கண்ணீருடன் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

**கணவர், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,**
**உறவினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

## விநாயகர் துதி

கஜானனம் பூதகணரதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பஷிதம்
உமாசுதம் சோகவினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

# பஞ்சபுராணங்கள்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி என் னுள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே! யிடமாய்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே!
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியான் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## சுவாமி விவேகாநந்தரின் சிந்தனை முத்துக்கள்

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்.

கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள் கட்டளையிடும் பதவி தானாகவே உன்னை வந்தடையும்.

மற்றவர்களுக்கு நன்மை செய்வது புண்ணியம். தீமை செய்வது பாவம்.

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்.

உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவது தான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**திருவாசகச் சிறப்பு**

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் மென்னுந் தேன்.

**சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோழிகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவர் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்ததிளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமானே
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்ததிருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறத்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இல்லாத சிறியோற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாக்கிக் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

- மாணிக்கவாசக சுவாமிகள் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை

( ராகம் - ராகமாலிகை)

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக்கும்
வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகலகலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன்னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங்
கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந்
நாவிநின்று
காக்குங் கருணைக் கடலே சகலகலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகலகலாவல்லியே. 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகலகலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும்
பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங்
கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகலகலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின்
றோற்றமென்ன
நிற்கும பிராமியென் னாவிலென் னோநின்
றிலைபுழைக்க
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகலகலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற் பணியச்செய் வாய்படைப்
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகலகலாவல்லியே. 10

- ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

ஸ்ரீ தேவராய சுவாமிகள் இயற்றிய

# கந்தர் சஷ்டி கவசம்

## நேரிசை வெண்பா

*துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்*
*நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்*
*கந்தர் சஷ்டி கவசந் தனை.*

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க!
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்ன வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறன
வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண் டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக
மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுகுண டிகுடிகுண டிகுகுண டிகுண
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் ளிரண்டும் கருணை வேல் காக்க!
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பா னாடியை முனைவேல் காக்க!
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க!
அரையிரு டன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்துகுலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே!
திரிபுர பவனே திகழொளி பவனே!
பரிபுர பவனே பவமொளி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுவித்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா!
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் ரஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க வென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்!

சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்!

**கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறனம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 01

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும் வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 02

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள உலக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்திக்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 04

அறுகெடுப் பாரய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுகற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 05

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாமஉரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 06

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்
காடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்டிரு முண்டந் துமைந்திலங்கச்
சோத்றெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 08

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னு முலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 09

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ ஆடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய ஆரமு தெங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன் எம்மையன் றாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந் தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பெற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டு செண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வில்லூன்றி முருகன் - திருகோணமலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிரு ஆயினார்க்குத்
துன்பமு மாய் இன்ப ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்று ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்
ஆதியு அந்தமும் ஆயினாருக்
காடப்பொற் சுண்ணம் மிடித்துநாமே. 20

## சிந்தனைக்கு சில வரிகள்

எல்லோரும் சொர்க்கத்திற்கு போக விரும்புகிறார்கள். ஆனால் யாரும் இறப்பதற்கு விரும்புவதில்லை.

மற்றவர்கள் எதை எனக்கு செய்யக் கூடாதென்று நினைக்கிறீர்களோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவா என்னவளின் நினைவுகள்

ஈழமணித் திருநாட்டின் கிழக்கே திரிகோணங்களிலும் மலைகள் புடைசூழ சைவமும், தமிழும் தழைத்தோங்க கோணேசர் வீற்றிருக்கும் திருகோணமலையிலிருந்து 20 கிலோமிற்றர் தொலைவிலுள்ள மூதூர், நாவலடியில் அமரத்துவமடைந்த கிருஸ்ணபிள்ளை, சின்னமுத்து தம்பதியர்க்கு உத்தம புத்திரியாக 06.05.1955 இல் பிறந்தவர் தான் அமரர். பரமேஸ்வரி முத்துலிங்கம்.

அமரத்துவமடைந்த திருமதி. பரமேஸ்வரி முத்துலிங்கம் நீர் வளமும், நில வளமும் ஒருங்கே கொண்டு இயற்கையன்னை கொஞ்சிக்குலாவும் நாவலடி கிராமத்தில் இவரது உடன் பிறப்புகளான சிவபாக்கியம், கண்மணி, மனோன்மணி, மங்கையற்கரசி ஆகியோருடன் வாழ்ந்து வந்தார்.

இவர் தனது கல்வியை அப்போது மூதூர் மகாவித்தியாலயம் என அழைக்கப்பட்ட தற்போதைய மூதூர் மத்திய கல்லூரியில் கல்விகற்றதோடு, விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கினார். அதன் பின்னர் அவர் பராயமடைந்த நிலையில் அதே ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி, தங்கம்மா தம்பதியர்க்கு பிறந்த முத்துலிங்கம் ஆகிய என்னை 10.06.1976இல் முதலித்தம்பி கதிர்காமத்தம்பி அவர்களின் தலைமையில் திருமணம் செய்து தனது இல்லற வாழ்க்கையை திருகோணமலையில் என்னுடன் நடாத்தி வந்தார். எங்களுடைய வாழ்க்கை சீரோடும், சிறப்போடும் நாட்கள் பல கடந்து நல்லறமாயானதன் பயனாக அனுஷியா, சியாமளா எனும் இரு பெண்குழந்தைகளையும், ரவிசங்கர் எனும் ஏகபுதல்வனையும் இறைவனின் திருவருளால் பெற்றெடுத்தோம். மேலும் இவருக்கு மருமகன்களாக நவநீதன், சுதானந்தன் ஆகியோரையும் பெற்றுக் கொண்டார். அவர் தனது பெற்ற பிள்ளைகளை மட்டுமன்றி பெறாப்பிள்ளைகள் அனைவரையும் தன்பிள்ளைகளாக தனது இறுதிக்காலம் வரை அப்போடும், பண்போடும் கட்டியாண்டார். அதுமட்டுமல்லாது தனது பேரப்பிள்ளைகள் மீதும் அளவு கடந்த அன்பு காட்டி அரவணைத்தார்.

இவர் என்னுடைய கடும் உழைப்பைச் சிதைக்காமலும் தான் அரும்பாடுபட்டு கால்நடைகள் வளர்த்தும் பல வீடுவளவுகளையும், சேமிப்புக்களையும் தேடி, எமது பிள்ளைகளையும் நல்வழிப்படுத்தி அவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்விற்கு நேராக நடாத்தியதுடன், ஏக புதல்வனை கல்விமானாக்கினார்.

"மனைத்தக்க மாண்புடையளாகித்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"

என்பதற்கு ஒப்ப இவர் தன்னுடைய வீட்டுக்கு வருவோரை அன்போடு வரவேற்று ஆறுதல் கூறி உபசரித்ததுடன் பிறரது மனம் கோணாது தன்னுடைய வாழ்க்கையை நடாத்தி வந்தார். இதனால் இவர் கந்தசுவாமி கோயிலடியில் உற்றார், உறவினர்களாலும், சுற்றத்தாராலும் 'குஞ்சு' எனவும், "குஞ்சக்கா" எனவும் செல்லப் பெயர் கொண்டு ஆசையாக அழைக்கப்பட்டார்

"அரிது அரிது மானிடராதல் அரிது
அதிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கப் பிறத்தல்"

என்று மணிவாசகப்பெருமான் சிவபுராணத்திலே அழகாகப் பாடியுள்ளார். அதேபோல் எனது மனைவி எந்தவித குறைவுமில்லாது இந்த மண்ணுலகிலே அவதரித்து வாழ்ந்து வந்த போதிலும் அவருக்கு கூற்றுவன் இறுதிக் காலத்திலே தீராத நோயைக் கொடுத்து வேதனைப்படுத்தவும் தயங்கவில்லை. இந்தநிலையில் அவரை நாங்கள் குணப்படுத்துவதற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இருதய தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளித்த போதும் 03.01.2015ம் திகதி சனிக்கிழமை இரவு 10.45 மணியளவில் அனைவரையும் சோகக்கண்ணீரில் ஆழ்த்தி நித்தியமாய் இறைவனது பாதங்களை தழுவிக் கொண்டார். அழுகின்றோம், புலம்புகின்றோம், எனது துணைவியின் ஆத்மா சாந்தி பெற வேண்டுமென்று.

அன்புக்கணவர்
(சி. முத்துலிங்கம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் கணவரின் கண்ணீர் காணிக்கை

பரமேஸ்வரி உனை நான்
பாரினிலே கைபிடித்த நாள் முதலாய்
மையல் கொண்டு என்னோடு
குலத்தின் ஒளி விளக்காய்
குடும்பத்தின் மணி விளக்காய்
குவலயம் உரைத்து நிற்க
குதூகலமாய் வாழ்ந்து வந்தாய்
இன்பமுடன் பெற்றெடுத்த
பிள்ளைகள் மூன்றுடனே
இல்லற வாழ்க்கைதனை
இதமாக வாழ்ந்தோம்.

மக்களெல்லாம் மாண்புடனே
மகத்தான வாழ்க்கைதனில்
உற்றதுணை ஏங்கியழ
பெற்ற மக்கள் கதறியழ
உற்றார் உறவினர்கள் கேட்டுஅழ
மறைந்து போன மாயமென்ன?



பூவோடும் பொட்டோடும்
புன்னகைத்த முகத்தோடும்
சுமங்கலியாய் சுபலோகம்
சுயமாகச் சென்றாயோ
துடுப்பிழந்த ஓடமாகித்
துயர்க் கடலில் துடிக்கின்றேன்
தேடி எங்கே வந்திடுவேன்
தேவதையே நீ சொல்லு.........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மொழிகளில் அழகானது "அம்மா"

மூன்று எழுத்துக்கள் கொண்ட ஒற்றைச்சொல், உலகில் எத்தனையோ மொழிகள் அத்தனை மொழிகளிலும் எத்தனையோ சொற்கள், அவற்றுள் அழகான சொல் "அம்மா" என்ற இந்த தமிழ்ச்சொல்

அம்மாவை வேறெந்த மொழியில் விளக்கினாலும் வராத பொருள் தமிழில் விளக்கினால் மட்டுமே வரும். அம்மா என்ற சொல்லின் முதல் எழுத்து "அ" உயிர்ரெழுத்து, "ம்" மெய்யெழுத்து, "மா" உயிர்மெய்யெழுத்து. இப்படி உயிரும், மெய்யும், உயிர்மெய்யும் சேர்ந்துதான் அம்மா ஆனது.

ஆம்! அம்மாதான் தன்குழந்தைக்கு உயிர் கொடுக்கிறாள். அந்த உயிர் உறைவதற்கு மெய் கொடுக்கிறாள். பத்து மாதம் சுமந்து பின்னர் அந்த சிசுவை உலகத்தில் உயிர்மெய்யாய், உலவ விடுகிறாள். இந்த உண்மையை உணர்த்துவது தான் அம்மா என்ற தமிழ்ச்சொல். அதனால் இது அழகான சொல் வாயில்லா ஜீவன்கள் என்று அழைக்கின்ற மாடுகன்றுகள் கூட வாய்திறந்தால் "அம்மா" என்றுதான் அழைக்கின்றன. இனிமேலும் அம்மா, அம்மா என்று தமிழில் சொல்லிச் சொல்லி அம்மாவிற்கு அழகு சேர்ப்போம்.

- பிள்ளைகள் -

- **குடும்பம் என்பது சுதந்திரமான கூட்டு அமைப்பு.**
- **உன்னை ஒருவன் ஒருமுறை ஏமாற்றினால் அது ஏமாற்றுபவன் தவறு மறுமுறை ஏமாற்றினால் அது உன் தவறு.**
- **கோள் சொல்வதைக் கேட்பவர்கள் இருக்கும் வரை சொல்பவர்கள் இருப்பார்கள்.**
- **வரவு அறிந்து செலவு செய்வது சிக்கனம், செலவு அறிந்து வரவு சேர்ப்பது நற்குணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் பணியை மறப்பேனா?

குந்தகம் நூறு விளைந்தெனக்கே
கொடும் துயர் தன்னை ஈர்ந்தாலும்
வந்திடும் கொடிய பசி பிணியால்
வாடி வதங்கிப் போனாலும்
நொந்திடும் நோயால் மெலிவுற்று
நொண்டி சொத்தி ஆனாலும்
எந்திருத் தாயின் பணி செய்ய
என்றும் புவியில் மறப்பேனா!

இந்த உலகெனை வெறுத்தாலும்
இடியும், அடியும் விழுந்தாலும்
பந்த பாசங்கள் வெறுத்தாலும்
பாவியென் உயிரோ பிரிந்தாலும்
சிந்தும் குருதியை என் தாய்க்கு
சீதனமாக நான் கொடுத்து
வந்திடும் துயர் தனைமாற்றி
என்பணி செய்ய மறப்பேனா!



எத்தனை செல்வங்கள் குவிந்தாலும்
எல்லோர் மதிப்பையும் பெற்றாலும்
பித்தனைப் போல வாழ்ந்தாலும்
பிழைக்கும் வழியை இழந்தாலும்
பக்தியின் நெறியில் செல்வதற்கு
பரமன் அருளை ஈந்தாலும்
முத்தமிழ் தாயின் பணி செய்ய
இத்தரை மீது மறப்பேனா?

மூத்த மகள்
ந. அனுஷியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையவள் கோபுரமே

தமிழில் முதலெழுத்து அகரமென்றால்
தரணியில் முதற்பெண்மை
அன்னையென்பேன்
அழிந்திடும் மனித வாழிவிலே
அன்னையே உன்போல் மனிதமில்லை.

செந்தமிழ்க் கதை கூறி
ஊட்டிய காலமதை
சிந்திடும் விழிகொண்டு
சிந்தனை செய்கின்றேன்.

வாழ்வியலின் புதுப் பண்பை
வாழ்வதந்காய் தந்தவளே என்றும்
தாழ்வில்லை என்வாழ்வில்
தாயவளின் அமுதமொழி கேட்டதனால்.

தொட்டி லிட்டுத் தாலாட்டி
தோள் சுமந்து வளர்த்தவளே
குவலயத்தில் உன்போல
தெய்வமுண்டோ இல்லையம்மா.

கண்வளரும் வேளையிலே
காவல் நீ இருந்து
கல்லான என் நெஞ்சை
கனிய வைத்துப் பார்த்தவளே



இட்ட அடி நோகாமல்
தொட்ட நடை போடவைத்தாய்
கெட்ட குலம் பிறந்தாலும்
குவலயத்தில் அன்னையிவள் கோபுரமே!

இளைய மகள்
சு. சியாமளா(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் நினைவுகளை சுமந்து......

இரு உயிரில் ஓர் உயிர்தான் இவ்வுலகில் இருக்கும் என்பதை முறியடித்து
இரு உயிரும் இவ்வுலகில் வாழவேண்டுமென வழியமைத்தவன் இறைவன்
உன் கருவில் என் உயிரை விதைத்தான் ஏனோ....? என்ன காரணமோ
தெரியவில்லை.
உன் அன்பில் நான் வாழ வேண்டும் என நினைத்தா - இல்லை
உன் பிரிவினால் என்றும் நான் வாட வேண்டும் என நினைத்தா......

ஈரைந்து பௌர்ணமிகள் எனை சுமந்து பெற்றெடுத்தாய் - ஏன்
நான் உனை என் தோளில் சுமந்து தீயறையில் தள்ளுவதைப் பார்ப்பதற்கா?
என் அலறல் ஒலி கேட்டு எங்கிருந்தாலும் ஓடிவந்தவள் நீ - ஆனால்
என் இரு விழிகளும் மனமும் கண்ணீரில் ததும்பித் ததும்பி உன் முன்பாக
அழுதேனே ஏன் நீ எழுந்து வரவில்லை..........

உன் கரங்களால் அன்பையும் பெற்றிருக்கிறேன் அடியையும் பெற்றிருக்கிறேன்
என் காதுகளை திருகி "இனிமேல் பொய் சொல்வாயா நீ" என அதட்டியதட்டி
வளர்த்தாயே
ஏன் நான் உனை விட்டுச்செல்லப் போகின்றேன் நிரந்தரமாய் என்பதை -உன்
இரு விழி அசைவில் கூட சொல்லவில்லையே அம்மா உன் மகனுக்கு
இவ்வாறு நீ மௌனமாய் இருந்ததற்கு காரணம் என்னவோ....

என்னதான் சொன்னாலும் கூடி இருந்து அழுதாலும் ஏன் கொஞ்சிகுலவினாலும்
அன்பு பரிமாறினாலும்
எனக்கு இட்ட நெற்றி முத்தங்களும் அன்புக்கண்களும் மீண்டும் வருமா?
என்ன தான் நான் இரவில் உணவு உண்டாலும் உன் உணவுக் கோப்பையில்
உனக்காய் இருக்கும் அன்னத்தில் ஒரு பிடியாவது எனக்கூட்டுவாயே
அவ் ஒரு பிடிக்காய் நான் யாரிடம் ஏங்குவேன் ஒரு தாயாக உன்னைப்போல்
ஈடாமுமோ சொல்.

என் விழிகள் உறங்கும் வரை உன் விழிகள் மூடாது உன்மடியில் தூங்க
வைப்பாயே......
இன்று உன் நினைவுகளை சுமந்து இருவிழிகள் உறங்காது இருக்கின்றேன்.
நீ எங்கே மறைந்து போனாயோ.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உதிரத்தைப் பாலாக்கி எனக்கு ஊட்டி உயிர்காத்து வளர்த்தாய்
இன்று நீ கொடுத்த உயிர் இவ்வுலகில் நடைபிணமாய் ஆயிற்றே
என் செய்வாய் நீ...........
உன் அருகில் வைத்து பொத்திப் பொத்தி வளர்த்த என்னை - இன்றுஅம்மா
அம்மா என்று பித்துப் பிடித்து நடக்க விட்டாய் இது நியாயமா சொல்.

பெற்ற பிள்ளை பெறாப்பிள்ளையென பாகுபாடு பார்க்காது அன்பு
காட்டினாயே
ஓர் சுளகில் உணவைக் குளைத்து உன்தனை அனைவரையும் சுற்றி வைத்து
உருண்டை பிடித்து நிலாச்சோறு தருவாயே அதை இங்கு யார் தான்
மறப்பார்?
கண் அயர்ந்து நான் தூங்கினாலும் நீயாகக் கறந்த பசும்பாலை
நள்ளிரவில் காய்ச்சி எடுத்து அருந்துங்கள் என் மக்களே என்பாயே.....
அதை தான் மறக்க முடியுமா....?

நற்பண்புகளை எனக்கு உரைத்தாய் நல் மகனாய் வாழ வேண்டுமென்று
ஊரார் குறைகூற வாழ்ந்து விடாதே என்றும் நீ உரைத்தாயே....
உன் சொல் பிள்ளையாகவே உன்னோடு வாழ்ந்து விட்டேன் அம்மா....
இனி உன் சொல் என் செவி கேளாது எவ்வாறு வாழப்போகிறேன் சொல்
நீ வாழ்ந்த போது நீ அழுத நாட்களும் இன்றி நீயின்றி நான் தவிக்கப்போகும்
நாட்களுமே அதிகம்..........


இறைவனிடம் இரங்கி வரமாக கேட்கின்றேன் இரண்டை.....
மறு ஜென்மம் என்று ஒன்று இருந்தால் மீண்டும் உன் மகனாகப்
பிறக்க வேண்டும்.
இல்லையேல் இந்த ஜென்மத்திலேயே நீ என் மகளாகப் பிறக்க வேண்டும்
ஏனென்றால்
தாயின் அன்புக் கடனைத் திருப்பிக் கொடுத்தவன் இவ்வுலகில் யாருமில்லை
புதிய உலகை தேடி நீ சென்று விட்டாய் நானோ இவ்வுலகில்
வாழப்போகிறேன் உன் நிழலோடு உன்நினைவுகளை சுமந்து........

ஆசை மகன்
மு. ரவிசங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 எழுத்தில் வாழ்க்கை


உலகிலுள்ள உயிர் மூன்றெழுத்து.
உயிரை இயக்கும் **சக்தி** மூன்றெழுத்து.
சக்தியின் வடிவம் **அன்னை** மூன்றெழுத்து.
அன்னை காட்டும் **அன்பு** மூன்றெழுத்து.
அன்பை உயர்த்தும் **அறிவு** மூன்றெழுத்து.
அறிவை வளர்க்கும் **பள்ளி** மூன்றெழுத்து.
பள்ளியிற் கற்கும் **கல்வி** மூன்றெழுத்து.
கல்வியால் உருவாகும் **பதவி** மூன்றெழுத்து.
பதவியை சிறப்பிக்கும் **இளமை** மூன்றெழுத்து.
இளமை தரும் **மனம்** மூன்றெழுத்து.
மனத்தால் இணையும் **மனைவி** மூன்றெழுத்து.
மனைவியால் உருவாகும் **மழலை** மூன்றெழுத்து.
மழலைக்குச் செலவாகும் **பணம்** மூன்றெழுத்து.
பணத்தினைத் தேடம் **கைகள்** மூன்றெழுத்து.
கைகள் சோரும் **முதுமை** மூன்றெழுத்து.
முதுமையின் பின் **முடிவு** மூன்றெழுத்து.
முடிவின் பின் தேவைப்படும் **பெட்டி** மூன்றெழுத்து.
பெட்டயிலடங்கும் **பிணம்** மூன்றெழுத்து.
பிணம் எடுத்துச் செல்லும் **ஊர்தி** மூன்றெழுத்து.
ஊர்தி செல்லுமிடம் **சுடலை** மூன்றெழுத்து.
சுடலையில் வைக்கும் **கொள்ளி** மூன்றெழுத்து.
கொள்ளியிலெரிந்த **அஸ்தி** மூன்றெழுத்து.
அஸ்தி கரையும் **கடல்** மூன்றெழுத்து.
கடலில் கரைந்த எங்கள் (குஞ்சு) **சித்தி** மூன்றெழுத்து.



**பெறாப் பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ என் குஞ்சுடா...!

பார்ப்பதற்குக் குழந்தை போலவே இருப்பாள்
பேசும் போதும் எங்களை
விட்டுக் கொடுக்க மாட்டாள்
ஏதாவது கிடைக்குமா என்று கேட்டால் போதும்
இந்தாடா என்று ஐம்பதும் நூறும் திணிப்பாள்.



எங்களுடைய பெரும்பான்மையான இரவுகள்
அவளுடன் கதைப்பதிலேயே முடிந்தன
பள்ளிக்காலங்களில் அவள் தீட்டிய ஓவியங்கள்
எங்களின் பவுடர் தீட்டப்பட்ட முகங்கள்

அம்மா அடித்தாலும் அப்பா அடித்தாலும்
இவளிருக்கிறாள் என்ற எண்ணம் தோன்றும்
ஏனோ இவள் முகம் என்றும் என்னுடன் வரும்
நான் தூங்கும் போதும்.

சென்ற முறை ஊருக்குச் சென்றிருந்த பொது
கவனித்தேன் அவள் கவனிக்காத அவளின் தேகத்தை,
காற்று நிரம்பிய பலூன் போல வீங்கியிருந்தது - ஏனோ
என் கண்கள் பனிப்பதும் தெரியவில்லை அவளுக்கு.

கிளம்பும் போது ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை
எடுத்து என் கையில் திணிப்பாள்
எதுக்குடா என்றால் நீ ஏதாவது வாங்குடா என்பாள்
என்னுடன் இரு என்றாலும்
அலுவல்களை முடித்துவிட்டு வருகிறேன் என்பாள்.

மாலை ஒன்றை சாத்தி விட்டு
கண்களை துடைக்கும் போது
பெட்டியில் அவளை மறுபடி பார்த்தேன்
அதிலிருந்து கொண்டு என்னை
வஞ்சனையாகவே பார்த்தால் என் குஞ்சு

பேத்தி,
ந. கிருஷிக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிப்பேரரசு கண்ணதாசனின்
# தத்துவ மொழிகள்

- தனக்குப் பிடிக்காத ஒன்றைப் பிரியத்தின் காரணமாக மற்றவர்கள் செய்தால் அதை மறுக்கக் கூடாது என்பது நாகரீக சம்பிரதாயமாயிற்று.

- கஷ்டமான காலங்களில் முட்டாள் தனமான யோசனைகள் கூடக் கெட்டிக்காரத்தனமாகத் தோன்றும். முயன்று பார்த்த பிறகுதான் அவை முட்டாள் தனமானவை என்று புரியும்.

- தர்மத்தைச் செய்ய முடியாதவனும் தர்மத்தை காக்க முடியாதவனும் வாழ்வதில் அர்த்தமில்லை.

- இதயம் அவரவருக்கென்று தனித்தனியாகப் படைக்கப்பட்டு விட்டது. வேதனைகளைப் பரிமாறிக் கொள்ள முடியுமே தவிர, இன்னொருவருக்காகத் தாங்கிக் கொள்ள முடியாது.

- அகம் புனிதமாக இருப்பினும் புறம் தூசு படிந்து கிடந்தால் இகம் வெறுத்துப் போகும்.

- பெரிய மனிதர்கள் பொய் சொன்னால் அந்தப்பொய் விலை உயர்ந்ததாக இருக்கும்.

- சந்தர்ப்பங்களே முக்கியம் : சம்பவங்கள் அல்ல.

- பிரியத்துக்குரியவர்களை எல்லாம் பிரிப்பது இறைவனின் விளையாட்டு.

- எதை விரும்புகிறமோ அதை ஒரு கட்டத்தில் வெறுப்பாய் எதை வெறுக்கிறாயோ அதை ஒரு கட்டத்தில் விரும்புவாய் நீ ஆசனத்தில் உட்கார்ந்தாலும் தரையில் உட்கார்ந்தாலும் இரண்டும் அவன் கொடுத்ததே.

# இரண்டின் அழகு

- வருவதும் போவதும் இரண்டு - இன்பம், துன்பம்
- வந்தால் போகாத இரண்டு - புகழ், பழி
- போனால் வராத இரண்டு - மானம், உயிர்
- தானாக வருபவை இரண்டு - இளமை, முதுமை
- தம்முடன் வருபவை இரண்டு - பாவம், புண்ணியம்
- தவிர்க்க முடியாதவை இரண்டு - பசி, தாகம்
- நம்மை விட்டுப் பிரியாதவை இரண்டு - பந்தம், நேசம்
- அழிவை தருபவை இரண்டு - பொறாமை, கோபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பேரப்பிள்ளைகளின்
# நீங்காத நினைவுகள்

அம்மம்மா என்று வாயாரக் கூப்பிட்டோம்
ஆசையுடன் எமை அணைத்து - அழைத்து
முத்தமிடுவாய்
இன் முகம் காட்டி இனிய நல் உணவளித்து
உவகையுடன் பாரத்திடுவாய்

நோயுற்ற போது ஓடோடி வந்தோம்
அன்பாக பேசி ஆசையுடன் எமைப் பார்த்தீர்
கனிவோடு எமை நோக்கி கரம் பற்றி
முத்தமிட்டீர்
கனிவான முத்தம் கடைசி முத்தமென
நாமறியவில்லை

உங்கள் முகம் நிழலாய் தொடர்கிறது
உங்கள் வயதில் யாரைப் பார்த்தாலும்
உம் நினைவே
எங்களது காலத்தில் பாதிவரை நீர் இருப்பீர்
என இருந்தோம்
உங்கள் காலம் இதுவரை என அறியவில்லை.

- நம்முடைய நண்பர்களை வைத்துத்தான் உலகம் நம்மை மதிக்கும்.
- உண்மையாக இருந்தாலும் பிறரது மனம் புண்படும் விதத்தில் பேசாதே.
- நல்ல செயல்களுக்குரிய பயன்கள் தாமதமாகவே கிடைக்கும்.
- உன் அயலவனை நேசி, ஆனால் வேலியை எடுத்துவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகோதரர்களின் கண்ணீர்ப் பூக்கள்

அன்பின் உறைவிடமாய் எங்கள்
உயிருடன் கலந்திருந்தாயே தங்கை
எமக்குத் தாயாகவும் சகோதரியாகவும்
அன்புடன் கலந்து அரவணைத்தாயே....

இன்னமுதளித்து இனிய மொழி பேசி
எளிமையுடன் என்றுமே வாழ்ந்தாயே
நீ எமை விட்டுச் சென்றதால்
துடுபிழந்த ஓடமாய் தத்தளிக்கின்றோம்

உறவுகளை என்றும் - உயிராக
மதித்து வாழ்ந்தாயே - இன்று
உறவுகளைத் தாண்டி
இறைவனடி சென்று விட்டாயே....

உன் கணவரும் பிள்ளைகளும்
பேரப் பிள்ளைகளும் கதறி அழுகின்றார்
நாம் என் செய்வோம் - உன்
ஆன்மா சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறவினர்களின் உள்ளக் குமுறல்கள்

இறப்பும் பிறப்பும் இறைவனின் கையில்
மரணம் வேதனையை தருகிறது
ஜனனம் மகிழ்ச்சியை தருகிறது
பிறப்பை ஏற்றுக் கொள்ளும் மனம்
இறப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது
பந்த பாசத்தால் கட்டுண்ட - ஜீவன்
பிரியும் போது கடந்தகால - நினைவுகள்
மனக் கண் முன் நிழலாடும் நேரம்
வேதனை வந்து ஆட்டிப் படைக்கின்றது
படைக்கப்பட்ட ஆன்மா - ஓர்நாள்
அழிக்கப்படும் என்று தெரிந்தும்
ஏற்றுக் கொள்ளத்தான் இதயம் - கனக்கிறது
எதையும் தாங்கும் இதயத்தோடு
உறுதி எடுத்துக் கொள்வோம்
நாம் எதையும் கொண்டு வந்ததும் இல்லை
எதையும் கொண்டு போவதும் இல்லை
எதற்காக நீ அழுகின்றாய் நீ
இழந்தது எதுவும் இல்லை - இன்று
உன்னுடையது நாளை அது
வேறொருவர் உடமையாகின்றது
இரவல் தந்தவன் கேட்கின்றான்
இல்லை என்றால் விடுவானா!
உறவைச் சொல்லி அழுவதால்
உயிரை மீண்டும் தருவானா?
கூக்குரலாலும் கேட்காது - அவன்
கோட்டுக்குப் போனால் ஜெயிக்காது
அவன் கோட்டையில் நுளைந்தால்
திரும்பாது என்பதை உணர்ந்து
எம்மை ஆற்றுப் படுத்திக் கொள்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மனக் குமுறல்கள்



மாமி காலவன் அழைக்க கலங்காது மண்ணுலகம்
விட்டு விண்ணுலகம் - சென்றாயோ
மண்ணுலகை விட்டு மறைந்து போனாலும் நீங்கள்
எங்கள் நினைவை விட்டு நீங்க முடியாது மாமி
உங்களால் உயர்ந்து உலகினை உணர்ந்தோம்
பாசம் எனும் பந்தத்தை எமக்களித்த மாமி
குலத்தின் ஒளி விளக்காய் மிளிர்ந்து உள்ளத்தால்
உயர்ந்து எம்மை
உன் குழந்தைகளாய் அரவணைத்தாய் மாமி
விரைந்தோடும் காலத்தில் மாதமொன்று கடப்பினும்
தாங்குமா எம்மனம் தூங்குமா எம் விழி ஆறுதல்
சொல்ல
யாருமில்லை - உங்கள் அன்புக்கு நிகராய்
எவருமில்லை மாமி...
வாழும் போது எமக்கு வழிகாட்டிய - மாமியே
உங்கள் பேரப் பிள்ளைகளின் கவலையில்
நாமும் கரைந்து உம் நினைவில் நனைகின்றோம்
வாழ்ந்தது போது மென்றா - திரும்பா வழிப்
பயணம் சென்று விட்டீர்
அழுது வடிக்கின்றோம் அகல் விளக்கு
அணைந்தது என்று ....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# *My Shining Shadow*

When I'm happy
Mother you're there with me
To Share it with me
When I'm Sad and unhappy
Mother is alwaya there
To Share my sorrow
And make me forget
Mother You're my only
dream world
It's you fascinating Smile
Enchanting voice
which attracts me to your words
As one who is eternally loved
Really you were such an angel
Attractive Kind hearted
Every re - birth should bring
Purity and serenity of my love



Loving
Children.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டிற்கு நீள அகல அடி அளவில் பலன் அறிய

| | |
|---|---|
| 06 அடி நன்மை | 42 அடி லக்ஷ்மி குடியிருப்பாள் |
| 07 அடி தரித்திரம் | 43 அடி சிறப்பில்லைதீங்குண்டாகும் |
| 08 அடி மிகுந்த பாக்கியம் உண்டு | 44 அடி கண்போகும் |
| 09 அடி மிக்க பீடை | 45 அடி சற்புத்திரர் உண்டு |
| 10 அடி ஆடு, மாடு குறைவில்லா வாழ்வு | 46 அடி வீடு விட்டு ஓட்டும் |
| 11 அடி பால் சாதமுண்டு | 47 அடி எந்நாளும் வறுமையுண்டு |
| 12. அடி செல்வம் குறைந்து போகும் | 48 அடி வீடு தீப்படும் |
| 13 அடி எல்லோரும் பகைவராவர் | 49 அடி மூதேவிவாசம் |
| 14 அடி சஞ்சலம்,நஷ்டம்,மனக்கஷ்டம் | 50 அடி பால் பாக்கியம் |
| 15 அடி காரிய விக்கினம், பாக்கியஞ்சேராது | 51 அடி வியாஜ்யம் |
| 16 அடி மிகுந்த செல்வமுண்டு | 52 அடி தான்யமுண்டு |
| 17 அடி அரசனைப் போல் பாக்கியஞ்சேரும் | 53 அடி வீண் செலவு |
| 18 அடி அமர்ந்த மனை பாழாம் | 54 அடி லாபம் |
| 19 அடி மனைவி மக்கள் மரணம் | 55 அடி பத்துஜன விரோதம் |
| 20 அடி இன்பம் தரும் இராஜ யோகம் | 56 அடி புத்திர உற்பத்தி |
| 21 அடி பசுக்களுடன் பால் பாக்கியம் | 57 அடி புத்திர அற்பம் |
| 22 அடி மகிழ்ச்சி, எதிரியஞ்சுவான் | 58 அடி விரோதமுண்டு |
| 23 அடி நோயுடன் கலங்கி நிற்பான் | 59 அடி சுப தரிசனம் |
| 24 அடி வயது, குன்றும் | 60 அடி பொருள் விருத்தி |
| 25 அடி தெய்வ கடாஷமில்லை | 61 அடி பகையுண்டு |
| 26 அடி இந்திரனைப் போல் வாழ்வார் | 62 அடி வறுமையுண்டாகும் |
| 27 அடி மிக்க செல்வத்துடன் வாழ்வார் | 63 அடி இருப்புக் குலையும் |
| 28 அடி செல்வமும், தெய்வகடாஷமுண்டு | 64 அடி வெகு சம்பத்துண்டு |
| 29 அடி பால் பாக்கியம் செல்வமுண்டு | 65 அடி ஸ்திரி நாசம் |
| 30 அடி லக்ஷ்மி கடாஷம் பெற்று வாழ்வார் | 66 அடி புத்திரி பாக்கியம் |
| 31 அடி சிவகடாஷத்துடன் நன்மை பெருகும் | 67 அடி பயமுண்டு |
| 32 அடி முகுந்தனருள் பெற்றுவையகம் வாழ்வர் | 68 அடி திரவிய இலாபம் |
| 33 அடி நன்மையுண்டு | 69 அடி அக்னி உபாதை |
| 34 அடி குடி விட்டோடும் | 70 அடி அன்னியருக்குப் பலன் |
| 35 அடி லக்ஷ்மி கடாஷமுண்டு | 71 அடி இராசியுப்பிரியம் |
| 36 அடி அரசரோடு அரசாள்வார் | 72 அடி வெகு பாக்கியம் |
| 37 அடி இன்பமும், இலாபமும் உண்டு | 73 அடி குதிரை கட்டி வாழ்வான் |
| 38 அடி பிசாசு குடியிருக்கும் | 74 அடி பிரபல விருத்தி |
| 39 அடி இன்பமும், சுகமுண்டாகும் | 75 அடி சுகமுண்டு |
| 40 அடி என்றும் சலிப்புண்டாகும் | 76 அடி புத்திர அற்பம் |
| 41 அடி இன்பமும் செல்வமும் ஓங்கும் | 77 அடி ஆணைகட்டி வாழ்வான் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்குத் திரியின் பயன்கள்

01. தாமரைத் தண்டில் திரி போட்டால் - ஜென்ம பாவம் நீங்கும்
02. வாழைத் தண்டு நூல் திரிபோட்டால் - குலதெய்வக் குற்றம் சாபம் நீங்கும்.
03. புதுவெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலரவைத்துப் போட்டால் - வீட்டில் லெட்சுமி கடாட்சம் வந்து சேரும்.
04. புதுமஞ்சள் சேலை துண்டில் திரி போட்டால் - தாம்பத்திய தகராறு நீங்கும்
05. சிவப்பு நிறத் துணியால் திரிபோட்டால் - திருமணத்தடை நீங்கும், மகப்பேறு உண்டாகும்.



## விளக்கேற்ற உகந்த எண்ணெய் வகைகள்

01. நெய் :- சகல செல்வங்களும் பெருகும், நலனும் உண்டு. முருகன் சந்நிதியில் நெய் விளக்கு ஏற்றுவது மரபு.
02. நல்லெண்ணெய் :- எல்லாப் பீடைகளும் விலகும், யமபயம் இருக்காது
03. இலுப்பை எண்ணெய் :- ஆரோக்கியம் உண்டாகும்
04. விளக்கெண்ணெய் :- சகல சம்பத்தும் உண்டாகும்
05. ஐந்து வகை எண்ணெய்கள் :- வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காயெண்ணெய், நெய், விளக்கெண்ணெய் ஆகிய ஐந்தும் விளக்கில் ஊற்றி ஒரு மண்டலம் (45 நாள்) பூசை செய்தால் தேவியின் அருள் பூரணமாக கிடைக்கும். (கடலை எண்ணெயில் விளக்கேற்ற கூடாது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய் வாழ்வோம்

01. அதிகாலையில் விழித்து நன்மைகள் நினைப்போம்.

02. சுட்டாறிய நீரினை நிரம்பவே அருந்துவோம்.

03. இயற்கை கடனைக் கிரமமாய் கழிப்போம்.

04. தினமும் எண்ணெய் தலைக்கு வைப்போம்.

05. யோகாப்பியாசம் தேசப்பயிற்சிகள் செய்வோம்.

06. காலையில் குளிப்பதை வழக்கமாக்குவோம்.

07. இலைக்கஞ்சி, தானியம் காலையுணவாக்குவோம்.

08. இளநீர், நன்னாரி தாகத்திற்கு அருந்துவோம்.

09. பச்சை மூலிகை தினசரி சேர்ப்போம்.

10. இயற்கை உணவையே இயல்பாக உண்போம்.

11. உண்டதும் ஓய்வு உரியமையாய் சிறிதெடுப்போம்.

12. பகலில் உறக்கத்தை பகையாய் எதிர்ப்போம்.

13. மாலையில் மகிழ்வாய் உடலைக் கழுவுவோம்.

14. சூடான நல் உணவை இரவில் உண்போம்.

15. உணவின் பின் பழங்கள், பால் உண்போம்.

16. உறங்கும் முன் தியானத்தில் மனச்சுமை போக்குவோம்.

17. மீள் வலுப்பெற்றிட நல்லுறக்கத்தைக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 06 | | 03 |
| 05 |  | 01 |
| 1955 | | 2015 |

மூதூரை பிறப்பிடமாகவும் திருகோணமலை கந்தசாமி கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி பரமேஸ்வரி முத்துலிங்கம்

அவர்கள் 03.01.2015 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திரு முத்துலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், அமரர் கிருஷ்ணபிள்ளை, சின்னமுத்து ஆகியோரின் பாசமிகு மகளும், அமரர் சின்னத்தம்பி, தங்கம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும்,

அனுஷியா, சியாமளா (கனடா), ரவிசங்கர் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

நவநீதன் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மட்டக்களப்பு), சுதானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருஷிக்கா, தரணிக்கா, தேனுஜன், சுதர்ஷிக்கா, சுலக்ஷிக்கா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

இவர் சிவபாக்கியம், கண்மணி, மனோன்மணி, அமரர் மங்கையற்கரசி, கணேஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர் தவமணி, தங்கவடிவேல் (மூத்தவன்), இராஜகோபால் (கனடா), அமரர்களான கோணாமலை ( ஓய்வுபெற்ற அதிபர் - திரு/விக்கினேஸ்வரா வித்தியாலயம்), வேலுப்பிள்ளை, கதிர்காமத்தம்பி (முன்னாள் உப - தபால் அதிபர்) , பாலகணேஸ் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

**அன்னாரின் தகனக்கிரியை 06.01.2015 செவ்வாய்க் கிழமை அன்று பி.ப. 2 மணிக்கு திருகோணமலை இந்துமயானத்தில் இடம்பெறும்.**

இல 90, வில்லூன்டி கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

தகவல் : குடும்பத்தினர்
0776002769/0771270127




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 06 | | 03 |
| 05 | | 01 |
| 1955 | | 2015 |



# அமரர். முத்துலிங்கம் பரமேஸ்வரி

நேசங் கொண்ட தாயே நீ மோசம் போனதேனம்மா?
வாசம் வீசிய மலர் கொண்ட மரம் வாடியதேனம்மா?

சுவாசம் நின்று மனித மரம் சரிந்ததேனம்மா?
நிஜமான தாயே நீ நிழலாகிப் போனதேனம்மா?

முகம் மலர்ந்து தினம் சிரிப்பாய் தாயே நீ தானம்மா?
முகம் தெரியாமல் உடல் உருக்குலைந்து போனதேனம்மா?

வாழ்க்கையெனும் வீதியில் மரண விதி விளையாடியதேனம்மா?
யாக்கை உயிர் பிரிந்து தொலைந்து போனதேனம்மா?

கடைசியில் கவலையும் கண்ணீரும் தந்துவிட்டு
கண்காணாத் திசை நீ போனதேனம்மா?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு**
**அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.**

திருக்கோணமலை மாவட்ட யாழ்
பல்கலைக்கழக மாணவர்கள்

SS Digital's T.P 026-2224933



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

- சின்னத்தம்பி + தங்கம்மா
  - தவமணி
  - தங்கவடிவேல்
  - முத்துலிங்கம்
  - இராஜகோபால்
- கிருஷ்ணபிள்ளை + சின்னமுத்து
  - சிவபாக்கியம்
  - கண்மணி
  - மனோன்மணி
  - மங்கையற்கரசி
  - பரமேஸ்வரி

முத்துலிங்கம் + பரமேஸ்வரி

- அனுஷியா + நவநீதன்
  - கிருஷிக்கா
  - தரணிக்கா
  - தேனுஜன்
- சியாமளா + சுதானந்தன்
  - சுதர்ஷிக்கா
  - சுலக்ஷிக்கா
- ரவிசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


" காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

**ஐம்பத்தொன்பது ஆண்டுகள் கம்பீரமாய் வாழ்ந்து**
**எம் உயிரோடு உயிராய்**
**உள்ளத்தில் உணர்வாய்**
**விழிகளிலே ஒளியாய்**
**கலையாத கனவாய் வாழ்வு பெற்று**
**எதிர்பாராத நேரத்தில்**
**பாடையில் படுத்த வேளை!**

வருகை தந்தும், தொலைபேசி வழித் தொடர்பில் ஆறுதல் கூறியும், மலர் வளையம் சாத்தியும், உண்டி கொடுத்தும், உதவிக்கரம் கொடுத்தும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டும், பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளை நவில்கின்றோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

90, கந்தசாமி கோவில் வீதி,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரத்துவம் அடைந்த சகோதரி மங்கையற்கரசியுடன் பரமேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்".

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 0652053060